# சங்கரன்கோவில் நகராட்சி

**2020-ம் ஆண்டு ஜுலை மாதம் 31.07.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்**

பொருள் எண் : 988

திருநெல்வேலி சாலையில் உள்ள பொது மயானத்தில் எரிமேடை மற்றும் காம்பவுண்ட் சுவர் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானஎண்: 966 நாள்: 30.06.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 08.07.2020 ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு ஆர்.மகாலிஙகம்<br>ஒப்பந்தக்காரர் | ரூ.5,50,000 | மதிப்பீட்டுத்தொகைகுச்சமம் | |
| 2. | திருபி.சிவா<br>ஒப்பந்தக்காரர் | ரூ.5,50,000 | 1.72% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு ஆர்.மகாலிங்கம் என்பவர் மதிப்பீட்டுத் தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு ஆர்.மகாவில்ஙம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 989

நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.K.Dis NO.**32910/J3/2019** நாள்.**26.06.2020** ன் அனுமதியின்படி இந்நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரப்பிரிவில் 75 தற்காலிக ஒப்பந்த பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மைப்பணி மற்றும் உரம் தயாரிக்கும் பணிகளை தனியார்மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் 75 பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி செய்ய புதிதாக தனியார் நிறுவனம் தேர்ந்தெடுக்க ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான மூன்றான்டுகளுக்கு பணி செய்ய ஆகும் மொத்த செலவினம் ரூ.**4,11,94,118** ற்கும் மற்றும் ஒப்பந்தபுள்ளி சம்பந்தமாக செய்திதாளில் விளம்பரம் செய்து மேல் நடவடிக்கைக்காகும் அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.**2839/2019**/H1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

நாள் – **31.07.2020.**

ஒ.ம்/–பீ.முகைதீன்அப்துல்காதர்
தனிஅதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.